செ.வெ.எண்: 29 நாள்: 15.09.2016

# தஞ்சாவூர் மண்டல கோ-ஆப்டெக்ஸின் தீபாவளி பண்டிகை விற்பனை இலக்கு ரூ.16.50 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை முக்கனி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி பண்டிகை சிறப்பு தள்ளுபடி விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (15-09-2016) துவக்கி வைத்தார்.

இந்த தீபாவளி பண்டிகை சிறப்பு தள்ளுபடி விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்களின் தாய் சங்கமாக திகழும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பினை வழங்கவும், அவர்கள் உற்பத்தி செய்யும் துணிரகங்களை விற்பனை செய்யவும், 1935ல் துவங்கப்பட்டு இந்தியா முழுவதும் 197 விற்பனை நிலையங்களை கொண்டு கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது.

தமிழகஅரசு கோ-ஆப்டெக்ஸின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி தஞ்சாவூர் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், திருவாரூர் மற்றும் அரியலூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் 19 விற்பனை நிலையங்கள் இயங்கி வருவதுடன் கடந்தாண்டில் (2015-16) மொத்த விற்பனை ரூ.23.86 கோடியாகும். இதில் தீபாவளி 2015 விற்பனை மட்டும் ரூ.12.31 கோடி. இந்தாண்டிற்கு (2016-17) தஞ்சை மண்டலத்தின் விற்பனை இலக்கு ரூ.30 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் தீபாவளி 2016 பண்டிகைக்கு மட்டும் ரூ.16.50 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் நமது மாவட்டத்திலுள்ள 2 விற்பனை நிலையங்களில் நடப்பாண்டில் (2016-17) ரூ.3.09 கோடி விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 2016 தீபாவளி பண்டிகைக்கு மட்டும் ரூ.1.55 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை முக்கனி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் 2015-16ம் ஆண்டு விற்பனை ரூ.214.41 இலட்சம் ஆகும். இதில் 2015ம் ஆண்டு தீபாவளி விற்பனை ரூ.106.68 இலட்சம். நடப்பு 2016ம் ஆண்டு தீபாவளி விற்பனை இலக்கு ரூ.130 இலட்சம் ஆகும்.

கோ-ஆப்டெக்ஸில் தீபாவளி பண்டிகைக்கு புதிதாக ஆர்கானிக் காட்டன் சேலைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சுங்கடி சேலைகள், ஆரணி கோயில் பார்டர் சேலைகள், குறைந்த விலை பட்டுச்சேலைகள், செட்டிநாடு சேலைகள், கூறைநாட்டு சேலைகள், காஞ்சி காட்டன் சேலைகள், லினன் ரெடிமேட் சட்டைகள் ஆகிய ரகங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளரின் ரசனைக்கேற்ப கோவை பகுதி நெசவாளர்களால் நெய்யப்பட்ட மகாராணி மென் பட்டுச்சேலைகள், கோலம் மென் பட்டுச்சேலைகள், சங்கீத் மென் பட்டுச்சேலைகள், உறையூர் மற்றும் ஜெயங்கொண்டம் பருத்திச்சேலைகள், அச்சிட்ட பருத்திச்சேலைகள், துண்டு ரகங்கள், சேலம் பாலியெஸ்டர் சேலைகள், எம்ப்ராய்டரி பாலியெஸ்டர் சேலைகள், எம்போசிங் ரக பாலியெஸ்டர் சேலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தீபாவளி பண்டிகைக்காக பட்டுச்சேலைகள், கோராகாட்டன் சேலைகள், ஜீன்ஸ், சுடிதார் மெட்டீரியல்கள், ரெடிமேட் சட்டைகள், மாப்பிள்ளை செட், துண்டு ரகங்கள் உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், 30 சதவீதம் சிறப்புத்தள்ளுபடி அனைவருக்கும் வழங்கப்படும். கோ-ஆப்டெக்ஸில் வாடிக்கையாளர் நலனுக்காக கனவு நனவு திட்டம், பரிசுக்கூப்பன் திட்டம், தங்கமழை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர் அனைவரும் கோ-ஆப்டெக்ஸில் தங்களுக்கு தேவையான தீபாவளிக்குரிய ஆடை ரகங்களை வாங்கி பயன்பெறுவதுடன் நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்ற உதவி புரிய வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கோ-ஆப்டெக்ஸ் தஞ்சாவூர் மண்டல நிர்வாக குழு உறுப்பினர்கள் திரு.என்.மாதேஸ்வரன், திருமதி.சு.ராஜலெட்சுமி, மேலாளர்கள் திரு.ஆர்.சீனிவாசன், திரு.பி.சுப்பிரமணியன், வாடிக்கையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**